எஸ்.டி.சி எண். 216/2022 தேதி:19/09/2024

ம.சா.1 ஆன திரு. கிருஸ்ணமூர்த்தி என்பவர்

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் சுந்தரம் கிளைட்டன் நிறுவனத்தில் ஆப்பரேட்டராக பணிபுரிந்துவந்தேன். நான் 1977 ஆம் ஆண்டு பணிக்கு சேர்ந்து 2008 ஆம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். நான் பணிக்கு சேர்ந்தபோது எனக்கு மாத சம்பளம் 5000 ஆகும். 2008 ஓய்வு பெறுவதற்கு முன்பாக மாத சம்பளம் ரூபாய்.,40000 பெற்றேன். மாத சம்பளத்தை தவிர நான் கேட்டரிங் கோவில் வேலைகளுக்கு சென்று வருவேன். நான் விஜபி ஓமம்ங்களுக்கு சென்று வருவேன். சில நேரங்களில் 25000 வரை ஒரு நாளைக்கு கொடுப்பார்கள். நான் பணம் சேமித்து வைத்திருப்பேன். நான் பணத்தை எவ்வாறு சேமிப்பேன் என்றால் பணத்தை வங்கி கணக்கில் சேமித்து வைப்பேன். இன்சுரன்ஸ் பாலிசி மூலமாக சேமித்து வைப்பேன். நான் சுந்தரம் கிளைட்டன் நிறுவனத்தில் இருந்து பணி ஓய்வு பெற்றபோது எனக்கு 15 லட்சம் ரூபாய் பணிக்கொடையாக கொடுக்கப்பட்டுள்ளது. மாதம் ஓய்வு ஊதியம் 2000 பெற்று வருகிறேன். நான் கூறிய மேற்படி தகவல்களை என்னுடைய வங்கி கணக்கை சரிபார்த்தால் தெரிய வருமா என்றால் சரிதான். நான் வருமானவரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் நிறுவனத்தில் பணிபுரிந்தபோது நிறுவனத்தின் மூலமாக வருமானவரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் லலிதா என்பவரை 4 ஆண்டுகளாக தெரியும். சுகந்தராணி என்பவரை பணம் கொடுப்பதற்கு முன்பாக 6 ஆண்டுகளாக தெரியும். லலிதா என்பவரை அவரது கணவர் மூலமாக தான் நான் தெரிந்து கொண்டேனா

என்றால் சரியல்ல. அவரை நேரடியாக எனக்கு தெரியும். லலிதா என்பவருக்கு என்னுடைய மகனின் சம்பாத்தியத்தில் இருந்தும், என்னுடைய சேமிப்பில் இருந்தும், நகையை அடமானம் வைத்தும், பணத்தை எடுத்து கொடுத்தேன். நகைகள் அடமானம் வைத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நகைகளை நான் விற்றுவிட்டேன். அதற்கான ஆவணம் ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை. சுகந்தராணி என்பவருக்கும் என்னுடைய சேமிப்பில் இருந்தும் நகைகள் விற்றதில் இருந்தும், என்னுடைய மகனின் சம்பாதியத்தில் இருந்தும் பணம் கொடுத்தேன். லலிதா மற்றும் சுகந்தா ஆகியோர்களின் கணவர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த நீதிமன்ற வளாகத்தில் புகார் கொடுக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.